DEPOSITION OF WITNESS

அரக்கோணம் குற்றவியல் நடுவர் எண்.1 நீதிமன்றம் 2025 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் வியாழன்கிழமை 24ம் நாள் சாட்சியாகிய நீபா என்பவரின் வாக்குமூலம் 1983 ஆம் ஆண்டு 10வது சட்ட விதியின்படி திருமதி. K.மம்தா Gr–III பென்ச் கிளார்க், என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு பதிவு செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | நீபா | வயது | 43 |
| க/பெ. | ரமேஷ் | இனம் | பெண் |
| கிராமம் | அரக்கோணம் | தொழில் | கொடுக்கல் வாங்கல் தொழில் |
| சமயம் | | தாலூக்கா | |

**C.C.207/2019**

(எதிரி நீதிமன்றத்தில் ஆஜர் இல்லை. எதிரி சார்பாக குவிமுச பிரிவு 317ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது. எதிரி வழக்கறிஞர் நீதிமன்றத்தில் ஆஜர்).

**குறுக்கு விசாரணை எதிரி தரப்பில் 24.04.2025 பு.சா.1**

1. எனது பெயர் என்ன வென்றால் நீபா. எனது இனிசியல் என்னவென்றால் ஆர். எனது வங்கி ஆவணங்களில் நீபா ஆர் என்று பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் இருக்கலாம். நான் என்ன படிப்பு படித்துள்ளேன் என்றால் 12ம் வகுப்பு படித்துள்ளேன். நான் கொடுக்கல் வாங்கல் தொழிலை எத்தனை வருடமாக செய்து வருகிறேன் என்றால் 2014ம் வருடத்திலிருந்து செய்து வருகிறேன்.

2. நான் கொடுக்கல் வாங்கல் தொழில் செய்வதற்கு அரசில் உரிமம் பெற்றுள்ளேனா என்றால் 2020ம் வருடம் பெற்றேன். யாருடைய பெயரில் உரிமம் வாங்கியுள்ளேன் என்றால் என் பெயரிலும், எனது அம்மா நவஇந்தியா பெயரிலும் சேர்ந்து உரிமம் பெற்றுள்ளேன். எனது நிறுவனத்தின் பெயர் அனுஷ்கா பைனான்ஸ். 2014ம் வருடம் அனுஷ்கா பைனான்ஸ் மற்றும் எனது பெயரில் உரிமம் பெறவில்லை என்றால் சரிதான். அனுஷ்கா பைனான்ஸ் எந்த இடத்தில் அலுவலகம் உள்ளது என்றால் அலுவலகம் வைக்கவில்லை.

3. நான் பணம் கொடுக்கல் வாங்கலுக்கு பதிவேடு பராமரித்து வருகிறேனா என்றால் இல்லை. எனக்கு எந்த வகையில் வருமானம் வருகிறது என்றால் எனது அம்மா எனக்கு பணம் கொடுப்பார், நானும் வெளியே பணம் வாங்குவேன். எதிரிக்கு பணம் கொடுக்கும்போது யார் யாரிடம் பணம் வாங்கி கொடுத்தேன் என்றால் அம்சா

என்பவர் 3 லட்சம் கொடுத்தார், கீதா இரண்டரை லட்சம் கொடுத்தார். மீதி பணம் என்னிடம் இருந்தது.

4. எனது வழக்கறிஞர் அறிவிப்பில் கடன் வாங்கி எதிரிக்கு பணம் கொடுத்தாக தெரிவிக்கவில்லை என்றால் சரிதான். புகார் மற்றும் முதன்மை சாட்சியத்திலும் தெரிவிக்கவில்லை என்றால் சரிதான். எனது பரிவர்த்தனைகள் வங்கி மூலம் நடைபெறும் என்றால் இல்லை. நான் வருமானவரி செலுத்துகிறேனா என்றால் இல்லை. நான் அரக்கோணத்தில் உள்ள சார்பு நீதிமன்றம், உரிமையில் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சொத்து வழக்கு, பாண்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். இந்த ஒரு காசோலை வழக்குதான் இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். நான் சார்பு நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண் 140/2021 என்ற எண்ணில் லோகநாதன் என்பவருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அந்த வழக்கு அதாலத்தில் முடிந்துவிட்டது.

5. அசல் வழக்கு 139/2021 என்ற எண்ணில் கோபி என்பவருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அந்த வழக்கை திரும்ப பெற்றுவிட்டேன். நான் வருமானவரி செலுத்தவில்லை என்று பொய்யாக சொல்கிறேன் என்றாலும் அசல் வழக்கு 139/2021 வழக்கில் குறுக்கு விசாரணையில் வருமான வரி செலுத்துவதாக தெரிவித்தேன் என்றால் சரியல்ல. நான் அந்த வழக்கில் சாட்சியம் தாக்கல் செய்யவில்லை. அசல் வழக்கு 139/2021,140/2021,130/2022, 230/2022 வழக்குகளில் சாட்சியம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் 230/2022 வழக்கில் மட்டும் சாட்சியம் தாக்கல் செய்துள்ளேன்.

6. நான் 230/2022 வழக்கில் டிரேடிங் தொழில் செய்வதாக தெரிவித்துள்ளேன் என்றால் வங்கி கணக்கை டிரேடிங் தொழிலுக்காக ஆரம்பித்தாக தெரிவித்தேன். எனக்கு எத்தனை வங்கி கணக்கு உள்ளது என்றால் அரக்கோணம் IDBI வங்கியில் மட்டும் ஒரு கணக்கு உள்ளது.

7. எதிரி, எனக்கு எப்படி பழக்கம் என்றால் ராஜேஸ்வரி என்பவர் மூலம் பழக்கம். ராஜேஸ்வரியின் விலாசம் என்னவென்றால் அரக்கோணத்தில் உள்ளார். விலாசம் தெரியாது. எனக்கு ராஜேஸ்வரி, எதிரியை தெரியாது என்றால் சரியல்ல. ராஜேஸ்வரியை தெரியாது என்பதால்தான் அவரது விலாசம் எனக்கு தெரியவில்லை என்றால் சரியல்ல. எதிரியை எத்தனை வருடமாக தெரியும் என்றால் 2012ம் வருடத்திலிருந்து தெரியும்.

கீதா, அம்சாவிடம் வாங்கிய பணத்தை பைசல் செய்துவிட்டேனா என்றால் இல்லை. நான் 2015ம் வருடம் எத்தனை பேருக்கு கடன் கொடுத்தேன் என்றால் நிறைய பேருக்கு பணம் கொடுத்துள்ளேன். அவர்களின் பெயர் ஞாபகமில்லை.

8. நான் பணம் கொடுத்தற்கு ஆவணம் பராமரித்து வருகிறேனா என்றால் இல்லை.

(எதிரி வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறுதேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது).

**மறு விசாரணை :** இல்லை.

Taken down by me/before me
in Open Court,
Interpreted/read over
to the witness and admitted by
the deponent to be correct.

Judicial Magistrate No.I,
Arakkonam.